**செய்தி வெளியீடு எண்: 561** **நாள்: 26.09.2012**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் உணவுப் பொருள் வழங்கல் துறை அமலாக்கப் பிரிவு செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் இன்று 26.9.2012 மதியம் 2.00 மணியளவில் சென்னை எழிலகம் வளாகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசு செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., ஆணையாளர் திரு.பெ.மு.பஷீர் அஹமது இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பி.அண்ணாமலை, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம். சந்திரசேகரன், இ.ஆ.ப., உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு கூடுதல் காவல் துறைத் தலைவர், திரு.கே. இராதாகிருஷ்ணன் இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர் ஆசியம்மாள் , சென்னை, மதுரை,கோவை காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான உத்தரவுப்படி , அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவது முற்றிலுமாக தடுக்கப்படுவது குறித்து எடுக்கப்பட வேண்டிய கண்காணிப்பு நடவடிக்கைகள் பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கினார்கள்.

- மாண்புமிகு தமிழக முதல்வர்அவர்கள் ஏழை எளிய மக்களின் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பின் காரணமாக பிறப்பித்த ஆணையின் படி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 1.6.2011 முதல் விலையில்லா அரிசியை வழங்கப்பட்டு வருகிறது. இதனால் இம் மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் உணவு பாதுகாப்பு வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, கோதுமை ,மண்ணெண்ணெய்,

துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு மற்றும் பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குமாக ஆண்டுக்கு ரூபாய் 4900 கோடிகள் மானிய செலவில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

- அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்திலிருந்து தமிழக மக்களை காப்பாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்குடன் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவற்றிற்கென கூடுதலாக ரூ 907 கோடிகள் ஒதுக்கி சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர்கள் அவர்கள் 31.3.2013 வரை நீட்டித்துள்ளார்கள்.
- வெளிச் சந்தையில் அரிசி விலை அதிகரித்து வருவதை தொடர்ந்து மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் நடத்தும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் பல்பொருள் அங்காடிகள் மூலமாக கிலோ ரூ.25/- மற்றும் கிலோ ரூ.31 /– என்ற விலையில் இரண்டு வகை சன்னரக அரிசி விற்பனை செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்திரவிட்டு அதன் படி அரிசி விற்பனை நடைபெற்று வருகிறது.
- இருப்பினும் அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் அவ்வப்போது பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்து, குறிப்பாக அரிசி கடத்தல், நியாயவிலைக் கடை பணியாளர்களின் முறைகேடுகள், கிடங்குகளிலிருந்து அரிசி சரியாக ரேசன் கடைகளுக்கு எடுத்துச் செல்லப்படாமல் சில சமூக விரோதிகள் செயல்படுதல் போன்ற செய்திகள் பத்திரிக்கைகளில் வெளியிடப்படுகின்றன.
- இத்தகைய செய்திகளை முறியடிக்கும் விதமாக உணவு பொருள் வழங்கல் துறையின் குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 16.04.2012 அன்று புதுடெல்லியில்

நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அத்தியாவசியப் பொருள்கள் கடத்தப்படுவது இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டுள்ளது. சட்டம் தன் கடமையை சரியாக செய்யும். இப்பணியில் எந்தவிதமான குறுக்கீட்டையும் பொறுத்துக் கொண்டதில்லை என்று கூறியுள்ளார்கள். அந்த வகையில் அத்தியாவசியப் பொருள்களை கடத்தும் நபர்கள் உடனுக்குடன் இனம் காணப்பட்டு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றனர். அவர்களில் ரேசன் கடை ஊழியர்களின் முறைகேடான தொடர்பும் இருப்பதாக அறியப்படும் இனங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறையினரால் உடனுக்குடன் பணிநீக்கம் செய்யப்பட்டும் கடுங்குற்றங்களில் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது.

- ஏற்கனவே மண்ணெண்ணெய் விநியோகத்தில் இருந்த பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு தற்போது மண்ணெண்ணெய் விநியோகம் சீரான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருள்களான பருப்பு வகைகள் வெளிச்சந்தைக்கு அதிக அளவில் கொண்டு செல்லப்படுகின்ற அபாய நிலை கண்டறியப்பட்டு அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் உணவு பொருள் வழங்கு துறை ஈடுபட்டுள்ளது. 28/29 ஆகஸ்ட் 2012 தேதிகளில் பயிலரங்கம் ஒன்று நடத்தப்பட்டது. அதே போன்றே தமிழகத்தில் உள்ள அனைத்து பறக்கும் படை அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி 25.9.2012 நேற்றைய தினம் உணவு பொருள் வழங்கல் துறையால் வழங்கப்பட்டுள்ளது. இது போன்ற பயிற்சிகளால் தமிழகம் முழுவதும் நியாயவிலைக் கடைகள் முறையாக கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதுடன் கடத்தல் வாயிலாகவும், கள்ளச் சந்தை வாயிலாகவும் பொது விநியோக திட்ட பொருட்கள் வெளியில் செல்வது முற்றிலுமாக தடுக்க இது நல்ல ஆரம்பமாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.
- அந்த வகையில் கடந்த 1.06.2011 முதல் ஆகஸ்ட் 2012 வரையிலான காலத்தில் 79,090 குவிண்டால் அரிசியும், 2,79,491 லிட்டர் மண்ணெண்ணெய்யும் 17,150 எரிவாயு

உருளைகளும் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளதுடன் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த 5,785 நபர்கள் கைது செய்யப்பட்டும், 2295 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டும் உள்ளன. மேலும் கள்ளச் சந்தை தடுப்பு காவல் சட்டம் 1980ன் கீழ் இது வரை 282 கடத்தல் புள்ளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- நியாயவிலைக் கடை முறைகேடு நிகழ்வுகளை பொறுத்த வரை தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் ஆய்வுகளின் விளைவாக கடந்த 01.06.2011 முதல் ஆகஸ்ட் 2012 வரையிலான காலத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினை பொறுத்த வரை ரூ 10,000 க்கு மேல் முறைகேட்டில் ஈடுபட்ட 12 நபர்கள் குற்றவியல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கூட்டுறவுத் துறையினை பொறுத்த வரையில் 124 நபர்கள் குற்றவியல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் நிரந்தரமாக பணி நீக்கப்பட்டுள்ளனர்.
- கடத்தல்/ கள்ளச் சந்தையில் பொது விநியோகத் திட்ட பொருட்கள் சமூக விரோதிகளால் கொண்டு செல்லப்படுவதை தடுத்திட தகவல் அளிக்கும் பொது மக்களுக்கு அளிக்கும் சன்மானத்தை ரூ 500/- லிருந்து ரூ 1000/- மாக வழங்கிடவும் 31.10.2011ல் அரசு ஆணையிட்டுள்ளது. அதே போன்று போலி குடும்ப அட்டைகளை இனங்கண்டு தகவல் தருபவர்களுக்கு ரூ 200/- லிருந்து சன்மானம் ரூ 250 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடான ரூ 18 இலட்சத்தை அரசு ஒதுக்கீடு செய்து அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளித்துள்ளது.
- தமிழகத்தின் எல்லையோர மாநிலங்களான கேரளா,கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு பொது விநியோகத் திட்ட அரிசி கடத்தப்படுவதை கண்காணித்து தடுப்பதற்காக கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் 28.12.2011ல் வெளியிடப்பட்ட அரசு ஆணையின் மூலம் குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் ஐந்து சிறப்பு குழுக்கள்

ஏற்படுத்தப்பட்டு பொது விநியோகத் திட்ட அரிசி, மண்ணெண்ணெய், துவரம்பருப்பு, பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் அண்டை மாநிலங்களுக்கு கடத்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

- கோயமுத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்ட பகுதியிலிருந்து அதிக அளவில் அரிசி கேரள மாநிலத்திற்கு கடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதனை கருத்தில் கொண்டு பொள்ளாச்சியில் தனி குடிமைப் பொருள் அலகினை ஏற்படுத்திட 03.01.2012ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அனுமதி வழங்கி 23.02.2012லிருந்து பொள்ளாச்சி அலகு செயல்பட்டு வருகிறது. அதன் விளைவாக ரூ 4,92,550 மதிப்புள்ள அத்தியாவசியப் பொருள்கள் கைப்பற்றுகை செய்யப்பட்டு அரசிற்கு ஏற்படவிருந்த இழப்பீடு தடுக்கப்பட்டுள்ளது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955ன் கீழ் 179 நபர்கள் கைது செய்யப்பட்டும் கள்ளச் சந்தை தடுப்பு காவல் ஆணை 1980ன் கீழ் 3 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- 2012 ஆம் ஆண்டிற்கு குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்ட போது கடை பிடிக்கப்பட்ட வழி முறைகளால் சுமார் 178 கோடி ரூபாய் அளவிற்கு அத்தியாவசியப் பொருள்கள் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.
- புதுப்பிக்கப்படாத குடும்ப அட்டைகள் , முறையான கண்காணிப்பு மற்றும் பதுக்கல் / கடத்தலுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் காரணமாக டிசம்பர் 2011 மாதத்தை காட்டிலும் சனவரி 2012 மாதத்தில் 15,121 மெ.டன் அரிசியும், பிப்ரவரி 2012 மாதத்தில் 13,388 மெ.டன் அரிசியும், மார்ச் 2012 மாதத்தில் 16,680 மெ.டன் அரிசியும், ஏப்ரல் 2012 மாதத்தில் 24,909 மெ.டன் அரிசியும், மே 2012 மாதத்தில் 25,078 மெ.டன் அரிசியும், சூன் 2012 மாதத்தில் 22,563 மெ.டன் அரிசியும், சூலை 2012 மாதத்தில் 19,485 மெ.டன் அரிசியும் ஆகஸ்ட் 2012 மாதத்தில் 18, 844 மெ.டன் அரிசியும் ஆக மொத்தம் 1,56,068 மெ.டன் அரிசி சேமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- கைப்பற்றுகை இனங்கள் தொடர்பாக தொடரப்படும் 6அ வழக்குகளையும் உடனுக்குடன் தீர்வு செய்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் தல ஆய்வில் மற்றும் காணொளி காட்சிகள் மூலமாக அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.
- இத்தகைய சூழ்நிலைகளில் அரசு மிகுந்த கவனம் செலுத்தும் இந்த பொது விநியோகத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட உணவு பொருள் வழங்கல் துறை , குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறையுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுத் துறையும் இணைந்து செயல்பட வேண்டும் என இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.
- சிறப்பு பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்களான துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் போதுமான அளவு நகர்வு செய்யப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
- அலுவலர்கள் மற்றும் நியாயவிலைக் கடை பணியாளர்கள் பொது மக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**